1969 மார்ச் 3]

இந்த இடங்களில் எல்லாம் மருத்துவ மனைகள் கட்ட வேண்டும் என்று நான் பல நேரங்களில் கேட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கு இல்லை என்ற முறையில் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட பொதுவாக இப்படி ஈ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் உள்ள இடங்களில் மருத்துவ மனைகள் கட்ட அரசாங்கம் அதிக முயற்சி எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். நம் முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கோவையில் ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி திறப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது கால தாமதமாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, விரைவில் ஈ.எஸ்.ஐ. ஆஸ் பத்திரிகள், டிஸ்பென்சரிகள் திறக்கப்படுவதற்கான துரித நடவடிக்கை களை அரசாங்கம் மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மருத்துவ மனைதான் கட்ட அரசாங்கத்தினிடம் திட்டம் இல்லை என்று சொன்னேன். ஏற்கெனவே உள்ள மருத்துவ மனையில் ஈ.எஸ். ஐ. திட்டத்தின்கீழ் ஈரோட்டில் 16 படுக்கைகள் கொண்ட ஒரு வார்ட் கட்ட ஒப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் வேலைகள் துவங்கப்படும். கோவை பற்றிக் குறிப்பிட்டார்கள். அது விரைவில் தீர்க்கப்படும்.

திரு. ஏ. முனியாண்டி : மதுரையில் தண்டிக்கப்படுகிற கைதிகளை மதுரையில் மத்தியச் சிறைச்சாலை இருந்தும்கூட திருச்சிக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள். அவர்களை மதுரை மத்தியச் சிறைச்சாலையில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் அடுத்த கேள்விக்குப் போய் விட்டோம்.

திரு. நா. காசிராமன் : ஈரோடு பகுதியில் ஈ. எஸ். ஐ. திட்டத்தின் கீழ் மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஈ. எஸ். ஐ. திட்டத்தின்கீழ் ஈரோடு பகுதியில் எவ்வளவு தொழிலாளர்கள் பயன் அடைந்து வருகிறார்கள் ? அவர் களுக்கு இந்த மருத்துவ மனை கட்டும் திட்டத்தை விரைவில் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மருத்துவ மனை கட்டுவதற்குத் திட்டம் இல்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். 16 படுக்கை கள் கொண்ட ஒரு வார்ட் கட்ட திட்டமிருக்கிறது. ஒப்பம் அளிக்கப் பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

தழை வெட்டிக்கொள்ள அனுமதி

* 34 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு, வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுராந்தகம் பகுதியிலுள்ள காடுகளில் தழை வெட்டிக் கொள்ள விவசாயிகளுக்குத் கொடுத்துவந்த அனுமதி மறுக்கப் பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், இதுபற்றி மறு பரிசீலனை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : அங்கு தழைகள் வெட்டுவதற்கு இன்னும் தடை இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஏறக்குறைய இரண் டாண்டு காலத்தில் காட்டில் விவசாயிகளுக்கு ஏற்கெனவே கொடுக்கப்

பட்டு வந்த பெர்மிட் முறைபோல் இப்போது கொடுக்கப்படுவதில்லை என்றும் அதுகுறித்து ஏதோ உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகவே, இதுகுறித்து உடனடியாக விசாரித்து இதற்காக ஆகவேண்டியதைச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைச்சுமை ஒன்றுக்கு பத்து காசு என்றும், வண்டிக்கு இரண்டு ரூபாய் என்றும் கட்டணம் விதித்து இப்போது பணம் வசூலித்துத் தழை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. அந்த முறை தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இத்திட்டம் 1969 அக்டோபர் வரையில் செயலில் இருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளில் தழை வெட்டுவதற்கு அனுமதிப்பதன் காரணமாக வளர்கின்ற வனத்துறை மரங்கள் அழிக்கப்படுகின்றன என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா ? வனத்துறை மரங்கள் அழிவதற்கு தழை வெட்டுவதற்கு அனுமதிப்பதுதான் காரணமாக இருப்பதால் அரசாங்கம் தடை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதுபோலச் சில இடங்களில் அத்தகைய தவறு நடப்பது உண்மைதான். அதைக் கண்காணித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்தத் தழையை எடுத்துச் செல்லும் நேரத்தில் சோதனை செய்துகூட அனுமதிக்கவேண்டிய நிலை இருக்கிறது. காட்டிலாகா அதிகாரிகள் கடுமையாக இருக்கிறார்கள் என்று விவசாயிகளிடமிருந்து தகவல் இருக்கிறது. உண்மையிருந்தால் விசாரிக்க வேண்டியிருக்கிறது. மரங்கள் வெட்டப்படாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு காட்டிலாகாவிற்கு இருக்கிறது.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, இருக்கின்ற மரங்களிலே உள்ள தழைகளை அகற்றும்போது இடையிலே 3 மாதம், 6 மாதம் ஆனை பசுந்தாள் உரத்தை உருவாக்கக்கூடிய விதைகள் இருக்கின்றன. அதைக் காட்டிலாகா மூலம் பயிரிட்டு விவசாயிகளுக்குக் கொடுக்க காட்டிலாகா முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இடைவெளியிலேயுள்ள புல் தரையிலே உற்பத்தியாகக் கூடியவற்றை விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய நிலை உருவாகிறது.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, தழைகள் வெட்டுவதற்கே சில இடங்களிலே அனுமதி இல்லாதபோது, திருச்சி மாவட்டத்தில் சில காடுகளில் விலை உயர்ந்த மரங்களைத் தவறான முறையில் அதிகாரிகள் விற்பனை செய்தார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது தழையைப்பற்றிய கேள்வி. மரங்களை வெட்டினார்கள் என்றால், யார், எந்த இடத்தில் வெட்டினார்கள் என்று தெரிவித்தால் அதைப்பற்றி விசாரிக்க உதவியாக இருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, தழையை மரத்திலிருந்து வெட்டுவதைவிட, இலையுதிர்காலத்தில் தழைகள் கீழே விழுந்து பூமியிலே கிடக்கும்பொழுது அவற்றை எடுத்துச் செல்ல அனுமதி கொடுத்தால் நன்றாக இருக்கும். இதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இங்கே கேட்டிருப்பது பசுந்தாள் உரத்தைப்பற்றி. உதிர்ந்த இலையைப்பற்றி அல்ல. உதிர்ந்த இலைகளை எடுத்துச் செல்வதற்கு தலைச் சுமைக்கு 10 காசு என்றும், வண்டிக்கு 2 ரூபாய் என்றும் வசூலிக்கப்படுகிறது.